# REACT செயல்முறையில் தொடக்கநிலை மாணவர்களுக்குக் கட்டுரை எழுதப் பயிற்றல்

**மணியரசன் முனியாண்டி**
Tuanku Bainun Teacher Training Institute, Bukit Mertajam, Penang, Malaysia
துவான்கு பைனுன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், புக்கிட் மெர்தாஜாம், பினாங்கு, மலேசியா
maniyarasan@ipgktb.edu.my

**Abstract:**
REACT approach can be considered as one of the Cooperative Learning strategies under Group Investigation or group roles. REACT is an acronym for Relating, Experiencing, Applying, Cooperating, and Transferring. This can be referred as the participation of students in group style of learning. The procedure for implementing REACT approach through cooperative learning in writing story-based essays is as follows:. Step 1: Organize students into groups.. Set up a group of 4 to 6 students to write a narrative essay. Step 2: Students can relate concepts that will be learned to their existing knowledge. (Relating). Students will associate the knowledge they have acquired with a given image, series, or title of story, storyline, storyteller, placeholder, timeline, characters, characteristics, language, etc. Step 3: Students are having discussions with a group of friends about a topic the teacher has to come up with a new idea. (Experiencing). The new topic will be discussed in four small topics such as beginning, peak, end and lesson based on the topic given by the author or series. Step 4: Students have come up with new ideas through the reflection of existing knowledge gained from everyday life experiences. (Applying). Students will begin writing, based on what they had seen, listened, and realized throughout their daily lives activities. This includes the beginning, the end and the lesson of the story. Then, the students will construct the sentences for the storybook. Step 5: Students engage in group discussions to ensure new ideas are born. (Cooperating). While constructing 20 complete sentences for a storyline, students will implement language arts and verbal linguistics. Step 6: Student demonstrates the ability of the student to write the idea in a sentence form. (Transferring). Students will construct 5 sentences per paragraph individually by inserting beginning, peak, end and lesson to create a storyline.

**ஆய்வுச்சுருக்கம்**
குழு விசாரணை அல்லது குழு பாத்திரங்களின் கீழ் கூட்டுறவு கற்றல் உத்திகளில் ஒன்றாக REACT அணுகுமுறை கருதப்படுகிறது. REACT என்பது தொடர்பு, அனுபவம், விண்ணப்பித்தல், ஒத்துழைத்தல் மற்றும் இடமாற்றம் ஆகியவற்றின் சுருக்கமாகும். குழு கற்றல் பாணியில் மாணவர்களின் பங்கேற்பு என இதைக் குறிப்பிடலாம். கதை அடிப்படையிலான கட்டுரைகளை எழுதுவதில் கூட்டுறவு கற்றல் மூலம் REACT அணுகுமுறையை செயல்படுத்துவதற்கான நடைமுறை பின்வருமாறு அமைகின்றது: படி 1: மாணவர்களை குழுக்களாக ஒழுங்கமைக்கவும் .. ஒரு கதை கட்டுரை எழுத 4 முதல் 6 மாணவர்கள் கொண்ட குழுவை அமைக்கவும். படி 2: மாணவர்கள் தங்களின் தற்போதைய அறிவுக்கு கற்றுக்கொள்ளும் கருத்துக்களை தொடர்புபடுத்தலாம். (தொடர்பானது). கொடுக்கப்பட்ட படம், தொடர், அல்லது கதை, கதைக்களம், கதைசொல்லி, ஒதுக்கிட, காலவரிசை, கதாபாத்திரங்கள், பண்புகள், மொழி போன்ற தலைப்புகளுடன் மாணவர்கள் பெற்ற அறிவை இணைப்பார்கள். படி 3: மாணவர்கள் ஒரு நண்பர் குழுவுடன் கலந்துரையாடுகிறார்கள் தலைப்பு ஆசிரியர் ஒரு புதிய யோசனையுடன் வர வேண்டும். (அனுபவம்). புதிய தலைப்பு ஆசிரியர் அல்லது தொடர் வழங்கிய தலைப்பின் அடிப்படையில் ஆரம்பம், உச்சம், முடிவு மற்றும் பாடம் போன்ற நான்கு சிறிய தலைப்புகளில் விவாதிக்கப்படும். படி 4: அன்றாட வாழ்க்கை அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட அறிவின் பிரதிபலிப்பின் மூலம் மாணவர்கள் புதிய யோசனைகளைக் கொண்டு வந்துள்ளனர். (விண்ணப்பிக்கிறது). மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் முழுவதும் அவர்கள் பார்த்த, கேட்ட, உணர்ந்ததை அடிப்படையாகக் கொண்டு எழுதத் தொடங்குவார்கள். கதையின் ஆரம்பம், முடிவு மற்றும் பாடம் இதில் அடங்கும். பின்னர், மாணவர்கள் கதைப்புத்தகத்திற்கான வாக்கியங்களை உருவாக்குவார்கள். படி 5: புதிய யோசனைகள் பிறப்பதை உறுதி செய்வதற்காக மாணவர்கள் குழு விவாதங்களில் ஈடுபடுகிறார்கள். (ஒத்துழைத்தல்). ஒரு கதைக்களத்திற்கு 20 முழுமையான வாக்கியங்களை உருவாக்கும் போது, மாணவர்கள் மொழி கலைகள் மற்றும் வாய்மொழி மொழியியலை செயல்படுத்துவார்கள். படி 6: யோசனையை ஒரு வாக்கிய வடிவில் எழுத மாணவர் திறனை மாணவர் நிரூபிக்கிறார். (இடமாற்றம்). ஒரு கதைக்களத்தை உருவாக்க ஆரம்பம், உச்சம், முடிவு மற்றும் பாடம் ஆகியவற்றைச் செருகுவதன் மூலம் மாணவர்கள் ஒரு பத்திக்கு 5 வாக்கியங்களை தனித்தனியாக உருவாக்குவார்கள்.

**திறவுச் சொற்கள்:** REACT கட்டுரைநெறிகள், கட்டுரைப் படைப்புலகம், தமிழ்க்கல்வி, புதுமைத்துவம்
**Keywords**: REACT REACT Essays, Essay Creativity, Tamil Education, Innovation

**முன்னுரை**

மனிதனுக்குள் புதைதிருக்கும் சிந்தனைச் சக்திதான் மொழியைக் கற்றுக்கொள்ளப் பேருதவி செய்கின்றது. சிந்தனையில் புதைந்து இருப்பவையே எண்ணங்களாக மாறி, பின்னர்ச் செயல்களாக உருப் பெறுகின்றன. எனவே, கட்டுரை எழுதுவதற்குமுன் மாணவர்களின் மனத்தில் கட்டுரை அமைவதற்கு அடிப்படையாகவுள்ள மொழி நிற்க வேண்டும். அம்மொழியானது மாணவர்கள் மனத்தில் சொற்றொடர் வடிவாகவோ, வாக்கிய உருவாகவோ, கருத்துக்குவியலாகவோ இருக்கும். மனத்தில் தேக்கி வைத்தவற்றை அவசியம் ஏற்படும்போது பயன்படுத்துவதே பயனீட்டுமுறை (application) எனப்படும். கட்டுரை எழுதும்போதுதான் மொழியாற்றலை மாணவர்கள் வெளியே கொண்டு வருகிறார்கள். ஆக்கத்திறன்மிக்க அந்த மொழி ஆற்றலை மாணவர்களுக்குப் புகுத்த வேண்டியது கட்டுரை கற்பிக்கும் ஆசிரியரின் தலையாய பணியாகும். தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லுதலும் எளிமையிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்லுதலும் கட்டுரை பயிற்றும் ஆசிரியர் கருத்தில் கொள்ளவேண்டிய இருவேறு அணுகுமுறைகளாகும். மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புகள் மாணவர்களின் அறிவுஎல்லைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஆசிரியர் விளக்கும் கருத்துகள் மாணவர் மனத்தில் உடனே பதிய வேண்டுமெனின் அவற்றைப் புரியும் வகையிலும் எளிய முறையிலும் புகுத்த வேண்டும். கருத்துகளை இனிய கதைவடிவாகவும் நிகழ்ச்சித் தொகுப்பாகவும் வழங்கலாம். அவ்வாறு நிகழ்த்தினால்தான் மாணவர்கள் கருத்துகளை நன்கு உள்வாங்குவர். ஆசிரியர் ஒருவர் தான் கற்றுக்கொடுக்கும் எல்லாவற்றையும் மாணவர்கள் தம் மனத்தில் உள்வாங்கி வாழ்வில் அவற்றை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற கட்டாயத்தினைப் பிறப்பிக்கக் கூடாது. அறிவுவளர்ச்சிக்காகத்தான் நாம் கல்வி கற்கிறோம் என்பது மறக்க முடியாத உண்மைதான். என்றாலும், நினைவுத் திறனே இல்லாமல் நினைவில் வேண்டியவற்றை நிறுத்தாமல் இருந்தால் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள முடியாது. எனவே, கட்டுரை எழுதத் தேவையான கருத்துகள் மாணவர்கள் மனத்தில் நிறுத்தப்படவேண்டிய முயற்சிகளை ஆசிரியர் எடுத்தே ஆக வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் அவர்களின் சிறப்பான மொழிவளத்தைக் கொண்டு கட்டுரை எழுதுவார்கள். மாணவர்களை ஊக்குவித்து, கட்டுரை எழுதப் பணிப்பது எளிதான செயல் அல்ல. இருப்பினும், போதுமான கருத்துகள் பெற்று முழுமையான கட்டுரை எழுதுவதற்கு மாணவர்களை ஆசிரியர் ஊக்கப்படுத்தவேண்டும். அதற்குமுன், கட்டுரை எழுதும் செயல் மிகவும் எளிதானது என்ற நம்பிக்கையை மாணவர் மனத்தில் விதைக்க வேண்டும். ஆசிரியர்களின் அரிய முயற்சியும், வழிகாட்டலும் சிறப்பான கட்டுரையினைப் படைக்கத் துணைபுரியும். வகுப்புமுறையில் மாணவர்களோடு கலந்துரையாடி, கட்டுரைக்கான கருத்துகளை அடையாளங்கண்டு பட்டியலிடுவது பழைய முறையாகும். மாணவர்களே குழுமுறையில் சுயமாக இயங்கிக் கட்டுரையினை எழுதுவது இக்கால முறையாகும். அவற்றுள் 'ரிஎக்ட்' (REACT) செயல்முறை முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. இச்செயல்முறையின்கீழ் மாணவர்கள் செயல்பட்டால் கட்டுரை எழுதவைக்கும் முயற்சி நன்கு பலனளிக்கும் என்று நம்பலாம்.

**பயிற்றும் வழிமுறைகள்:**

கதை வடிவிலான கட்டுரைகள் தமிழ்மொழிக்கான தேர்வுத்தாட்களில் இடம்பெற்றிருப்பதை நாம் அறிவோம். மொழியில் உள்ள அழகியலை வெளிப்படுத்த கதைவடிவக் கட்டுரைகள் மிக உதவுன்றன. கதைகளில் வெளிப்படும் வருணனைகள் மாணவர்களை ஈர்ப்பதோடு அவர்களின் சிந்தைக்குத் தீனியாகவும் அமைகின்றன. மாணவர் இன்புற்று எழுதிய அதேவகையிலான இன்பத்தை வாசகனாக உருமாறும் ஆசிரியரும் கிடைக்கப் பெறுகிறார். கதையினில் உள்ள முருகுணர்ச்சிகள் இலக்கிய இன்பத்தை ஊட்டும். கதை என்பது சம்பவங்களின் கோர்வையாக இருப்பதால் அதன் உள்ளடக்கத்தினை மனத்தில் நிலைப்படுத்தி விரைவில் எழுதிவிடுவார்கள். உரைநடையாக உள்ள இதரவகை பனுவல்களைக் காட்டிலும் கதைவடிவில் உள்ள பனுவல்கள் மணவர்களின் மனத்தில் எளிதில் பதிந்து விடுகின்றன. இதுவே, கதைவடிவிலான கட்டுரையினைப் படைக்க மாணவர்களுக்கு உந்துதலாகவும் அமைந்துவிடுகின்றது. கோர்வையாக எழுதவோ பேசவோ கதை இலக்கியமே அவர்களுக்கு மிகவும் துணைபுரிகின்றது. கதையின்பால் உள்ள ஈர்ப்பினால், மாணவரிடையே வாசிக்கும் பழக்கம் ஏற்படும். வாசிப்புப்பழக்கம் தொடர்ந்து நிகழ்த்தப்படுவதால் அவர்களிடையே சரளமான வாசிப்பும் பேச்சும் தோன்ற வாய்ப்பு உண்டு.

ஆசிரியர்கள் தெரிவுசெய்து போதிக்கவிருக்கும் கதைகள் தொன்மம், பின்னோக்கு உத்தி போன்ற கூறுகள் இன்றி எளிதில் புரியக்கூடியதாக இருப்பது நலம். கற்பனை உலகில் சஞ்சாரமிடத் தூண்டும் கதைகளையும், மாணவர்களை அச்சமூட்டும் கதைகளையும் ஏரணமற்ற கதைகளையும் தவிர்க்கவேண்டும். சிறார் கொடுமை, பாலியல் கொடுமைகள், அடிமைத்தனம், போதைப்பொருள் உட்கொள்ளல், கடத்தல், கொடுமைகள்,

கயமைகள் போன்ற உளவியல் ரீதியில் பாதிப்பு ஏற்படுத்தும் கதைகளையும் தவிர்க்க வேண்டும். கற்றல் தரத்திற்கும் மாணவனின் தரத்திற்கும் ஏற்ற கதைகளைத் தெரிவுசெய்வதில் ஆசிரியர் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். அடிப்படையில் கதைகற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கதைகளைப் படிக்கும் ஆர்வம் இருந்தால்தான், சிறப்பான கதாசிரியர்களை அடையாளங்கண்டு அவர்களின் சிறுகதைகளைத் தெரிவுசெய்து வழங்க முடியும்.

கதை வடிவிலான கட்டுரையைப் பயிற்றுவிக்கவேண்டும் என்றால், அப்பாடத்தை நடத்தும் ஆசிரியர் சிறந்தொரு கதை சொல்லியாக இருப்பது மிக அவசியம். குரல் ஏற்ற தாழ்வு, தக்கதோர் ஒலி அமைப்பு, போன்றவற்றால் அந்தக் கற்பித்தலை மேற்கொள்ளலாம். கதையில் புனையப்பட வேண்டிய கதாப்பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பாகமேற்று நடிக்க மாணவர்களைப் பணிக்கலாம். மாணவர்கள் நடித்த அக்கதையைக் காணொலி வடிவில் பதிவுசெய்து வகுப்பில் காணச் செய்யலாம். சிறுகதையில் உலாவரும் கதைமாந்தரைப்போல் வேடமணிந்து ஆசிரியரே கதையை வழிநடத்தியும் செல்லலாம். மாணவர்களுக்கும் அவர்கள் அன்றைய தினம் கற்பிக்கவிருக்கும் பாடத்திற்கும் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதில் ஆசிரியர் முதன்மைப் பங்கு ஆற்ற வேண்டும். கற்பிக்கும் கதையை நாடகவடிவில் நடித்துகாட்டச் செய்தல் சிறப்புடையது. இது மாணவர்களின் மனதில் சிறுகதையை ஆழமாகப் பதிவுசெய்யும் வல்லமை கொண்ட உத்தியாகும். கற்பிக்கும் சிறுகதை தொடர்பாகச் சொற்பொழிவு ஆற்றவும் செய்யலாம். எல்லாவற்றிற்கும் மேலாகச் கதைப்பாடத்தை முடித்தபின் சிறுசிறு வினாக்களை எழுப்பி மாணவர்களின் அறிதிறனைக் கண்டறியலாம் (சுஜிமான், 1988).

**செயல்முறை**

‘மாணவர்கள் எழுத்துப்பிழைகள் இன்றி இலக்கண அமைதியுடன் நல்ல கையெழுத்தில் எழுதுவர்’ என்ற கற்றல் தரமும், ‘சிந்தனைத் திறன்களைப் பயன்படுத்தித் தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் கற்பனை வளத்துடன் படைப்பர்’ என்ற கற்றல் தரமும் தொடக்கநிலைத் தமிழ்ப்பளிகளுக்கான கலைத்திட்டத்தினில் இடம்பெற்றிருப்பதை நாம் அறிவோம். கட்டுரை வரைவது தனி ஒரு கலை. மனத்தில் தோன்றிய எண்ணங்களை எழுத்துகளாக மாற்றி, அவற்றைக் கதைவடிவிலோ, கட்டுரைவடிவிலோ பதிக்கத் தெரிந்த மாணவன் கற்றலிலும் வாழ்வினிலும் வெற்றிபெற்ற ஒருவனாகக் கருதப்படுகிறான். கருத்துக் கட்டுரைகளையோ கதை கட்டுரைகளையோ மாணவர்கள் எழுதச் சிரமம் அடைவதை ஆசிரியர்களாகிய நம்மால் அறியமுடிகின்றது. கட்டுரை கற்பிக்கும் அணுகுமுறைகளில் இன்றளவில் முதன்மையானவையாக இருப்பவை விளக்கமுறையே ஆகும். ஒரு சிலரே பட்டறைமுறை, பதிவுநாடா முறை, இடுபணிமுறை, பனுவல் வாசிப்புமுறை, கருத்தரங்கு முறை, வினா முறை, உரை நிகழ்த்தும் முறை, நாடக முறை, குழு முறை போன்ற கற்பித்தல் முறைகளை வகுப்பினில் கையாளுகின்றனர் (தியூ, 1991). கதை கற்பித்தலில் ஆய்வுச் சிந்தனையும் ஆக்கச் சிந்தனையும் இருப்பது அவசியம் ஆகும் (ஸ்வார்ஸ் & போர்க்ஸ், 1994). தனிப்படம் அல்லது தொடர் படங்களைக் கொண்டு கதை எழுதும் கற்றல் தரம் கலைத்திட்டத்தில் உள்ளதை நாம் அறிவோம். அவ்வாறான கதை கட்டுரை எழுதுவதைப் பயிற்ற ‘ரிஎக்ட்’ (REACT) என்ற ‘துலங்கல்’ செயல்முறையைப் பயன்படுத்தலாம்.

இதில் R என்பது Relating என்ற பொருளையும், E என்பது Experiencing என்ற பொருளையும், A என்பது Applying என்ற பொருளையும், C என்பது Cooperating என்ற பொருளையும், T என்பது Transfering என்ற பொருளையும் உணர்த்துகின்றது. Relating என்ற செயல்பாட்டின்வழி மாணவர்களின் சிதையில் உள்ள முந்தைய அறிவோடு தொடர்புபடுத்துதல் என்றும், Experiencing என்ற செயல்பாட்டின்வழி மாணவர்கள் புதிய அனுபவத்தினையும் அறிவையும் பெறுதல் என்றும், Applying என்ற செயல்பாட்டின்வழி கற்ற அறிவைப் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டு செல்லுதல் என்றும் Cooperating என்ற செயல்பாட்டின்வழி குழுமுறையில் மாணாவர்கள் கலந்துரையாடிச் சிக்கலுக்குத் தீர்வு காணுதல் என்றும் Transfering என்ற செயல்பாட்டின்வழி மாணவர்கள் தாம் கற்ற அறிவினை மையமாகக் கொண்டு புதிதான ஒன்றை உருவாக்குவர் என்றும் பொருள்கொள்ளலாம்.

**அமலாக்க முறைமை**

அ) முந்தைய அறிவோடு தொடர்பு படுத்துதல் (Relating)

இந்த Relating என்ற செயல்பாட்டின்வழி கதை தொடர்பான கருத்துகளை மாணவர்கள் தம் சிந்தையில் உள்ள முந்தைய அறிவோடு தொடர்புபடுத்துவர் என்ற பொருளைக் கொள்ளலாம். மாணவர்கள் விளையாடும்பொழுதோ, உண்ணும்பொழுதோ, பள்ளி மற்றும் வீட்டுச் சுற்றுப்புறங்களில் நடமாடும்பொழுதோ பல்வித அறிவினைப் பெற்றவர்கள் ஆகின்றனர். அவ்வாறு அவர்கள் பெற்றிருக்கும் அனுபவங்களை அன்றைய கதைப்பாடத்தோடு தொடர்புபடுத்த ஆசிரியர் தூண்ட வேண்டும். இதனைக் கட்டுவியம் என்றும் பொருள் கொள்லலாம். கட்டுவியம் என்பது மாணவர்கள் தம் முன்னறிவையும் அனுபவத்தினையும் அடிப்படையாகக் கொண்டு தங்களின் சிந்தனை அல்லது கருத்துக்கோடலை உருவாக்குவர். தகவல்களையும் முன்னறிவையும் கொண்டு மாணவர்கள் புதிய சிந்தனையைப் பெறுவர். முதல் கட்டமாக, கொடுக்கப்பட்ட தனிப்படம், தொடர்ப்படம் அல்லது தலைப்பிற்கேற்ற

கதையோட்டம், கதைக்களம், கதைமாந்தர்கள், இடப்பின்னணி, காலப்பின்னணி, கதையில் இணைக்கவேண்டிய செய்யுள், மொழியணிகள் போன்றனவற்றை மாணவர்கள் தாம் பெற்ற முந்தைய அறிவோடு தொடர்புபடுத்துவர்.

ஆ) முந்தைய அறிவோடு தொடர்புபடுத்தி புதிய அனுபவம் பெறல்

Experiencing என்ற செயல்பாட்டினை முந்தைய அறிவோடு தொடர்புபடுத்தி மாணவர்கள் புதிய அனுபவம் பெறல் என்று பொருள் கொள்ளலாம். மாணவர்கள் தாம் பெற்ற புதிய அறிவு, திறன், பண்பு ஆகியனவற்றை அனுபவங்களாகப் பெற்று, அடுத்த கட்டத்திற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பல்வேறு துறைச்சார்ந்த நடப்பு விவகாரங்கள், வாழ்க்கை நடைமுறைகள் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடைய கட்டுரைகளை வழங்குவதால் மாணவர்களின் எழுதும் ஆர்வம் கூடும் வாய்ப்பு உண்டாகின்றது. 'முந்தைய அறிவோடு தொடர்புபடுத்தி புதிய அனுபவம் பெறல்' என்ற முதல் சுற்றில் மாணவர்களுக்குத் தனிப்படம், தொடர்ப்படம் அல்லது தலைப்புக் கொடுக்கப்படவேண்டும். மணவர்கள் தாம் எழுதவிருக்கும் கதைக்கு ஏற்ற கதையோட்டம், கதைக்களம், கதைமாந்தர்கள், இடப்பின்னணி, காலப்பின்னணி மற்றும் கதையில் இணைக்க வேண்டிய செய்யுள், மொழியணிகள் போன்றனவற்றை முந்தைய நாட்களில் கற்ற அறிவோடு தொடர்புபடுத்திப் பார்க்கத் தூண்டவேண்டும். குழுவடிவில் மாணவர்கள் அவை தொடர்பாகக் கலந்துரையாடுவர்.

இ) முந்தைய அறிவோடு தொடர்புபடுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைப் படுத்துதல்.

Applying என்ற செயல்பாட்டினை முந்தைய அறிவோடு தொடர்புபடுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைபடுத்துதல் என்று பொருள் கொள்ளலாம். ஆய்வு செய்தல், விசாரணை செய்தல், தரவுகளைச் சேகரித்தல், முடிவெடுத்தல் போன்ற நடவடிக்கைகளை இதன்வழி செயல்படுத்தலாம். 'முந்தைய அறிவோடு தொடர்புப்படுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைப் படுத்துதல்' என்ற இரண்டாம் சுற்றில், மாணவர்கள் தம் அன்றாட வாழ்க்கையில் பார்த்து, கேட்டு, உணர்ந்து அறிந்த பட்டறினைப் பயன்படுத்தத் தொடங்குவர். கதைத்தொடக்கம், கதையின் உச்சம், கதையின் முடிவு,கதை உணர்த்தும் படிப்பினை ஆகியனவற்றுள் தம் அனுபவத்தைப் புகுத்தும் வாய்ப்பினைப் பெறுவர். கதைக்கட்டுரைக்கான வாக்கியங்களையும் கட்டமைப்பர்.

ஈ) முந்தைய அறிவோடு தொடர்புப்படுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைபடுத்தும் வகையில் கலந்துரையாடுதல்.

Cooperation என்ற மூன்றாம் சுற்றின்வழி, மாணவர்கள் தமது சிந்தையில் உள்ள முந்தைய அறிவோடு புதிய தலைப்பினைத் தொடர்புபடுத்துவர். அவ்வாறான செயலை நிகழ்த்தும்போது அவர்கள் புதிய அனுபவம் பெற்றவர்கள் ஆகின்றனர். கூட்டுமுயற்சியில் இறங்கியிருப்பதால் கதைக்கட்டுரை எழுதுவதில் உள்ள சிக்கல்களைக் அவர்கள் கடக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த மூன்றாம் சுற்றில், குழுமுறையில் தொடக்கம், உச்சம், முடிவு, படிப்பினை என்ற சிறுதலைப்புகளில் 20 வாக்கியங்களை இணைந்து உருவாக்குவர். ஒவ்வொரு சிறுதலைப்பிற்கும் 5 வாக்கியங்கள் உருவாக்கி, அவற்றில் ஏற்ற வருணனைகள், செய்யுள் மொழியணி போன்றவற்றை இணைப்பர்.

உ) முந்தைய அறிவோடு தொடர்புப்படுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைபடுத்தும் வகையில் கலந்துரையாடி வினைமாற்றம் செய்தல்.

Transfering என்ற செயல்பாட்டினை முந்தைய அறிவோடு தொடர்புப்படுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைபடுத்தும் வகையில் கலந்துரையாடி வினை மாற்றம் செய்தல் என்று பொருள் கொள்ளலாம். நான்கு செயல்முறைகளின்வழி பெற்ற போதிய தகவல்களைக் கொண்டு முழுமையான கதை கட்டுரையை எழுதும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறார்கள். ஆசிரியர் மேற்பார்வையாளர்களாக மட்டும் செயல்படுவார்கள். 'முந்தைய அறிவோடு தொடர்புப்படுத்தி புதிய அனுபவம் பெற்றவற்றைச் செயல்முறைபடுத்தும் வகையில் கலந்துரையாடி வினைமாற்றம் செய்தல்' என்ற நான்காம் சுற்றில் தனியாள் முறையில் பத்திக்கு 5 வாக்கியங்கள் என்ற அமைப்பில், தொடக்கம், உச்சம், முடிவு, படிப்பினை ஆகிய நான்கு பத்திகளில் அமைந்த கதைக்கட்டுரையினை எழுதி முடிப்பர்.

**முடிவுரை**

கதைகள் வாசித்து மகிழ மட்டும் பயன்பட்ட காலம் மறைந்து, தமிழ், ஆங்கில, மலாய், சீன மொழிகளுக்கான பாடப் புத்தகங்களிலும் தேர்வுத்தாட்களிலும் அவை இடம்பெற்று விட்டன. மாணவர் சமுதாயத்தினரிடையே இலக்கியச் சுவையினை ஊட்டும் வகையில் தொடக்கப்பள்ளி, இடைநிலைப் பள்ளிகளுக்கான தமிழ்க்கல்விக் கலைத்திட்டங்களிலும் கதை கூறுதல், கதை எழுதுதல் போன்ற கற்றல் தரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சிறுகதைத் திறனாய்வு, கதைக்கரு, கதைமாந்தர், கதைக்களம் போன்ற கேள்விகள் இடைநிலைப்

பள்ளிகளுக்கான பி.தி.3 (PT3) என்ற மதிப்பீட்டிலும், எஸ்.பி.எம் எனப்படும் மலேசிய கல்விச்சான்றிதழ் (SPM) தேர்விலும், எஸ்.டி.பி.எம் (STPM) ஆகிய தமிழ் மற்றும் தமிழ் இலக்கியத் தேர்வுத்தாட்களிலும் கேட்கப்படுகின்றன. கதை, காட்சி, சம்பவங்கள், ஒழுக்கம் நிறைந்த கதை மாந்தர், சமுதாயநெறி ஆகியவை சிறப்புக் கூறுகள் பொருந்திய ஒரு கதையை ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும்போது, மாணவரின் எண்ணம் சீர்பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. கதையை அவர்கள் வாசித்துக்கொண்டு இருக்கும்போதே, அடுத்தக் கட்டப் போராட்டம் எதுவாக இருக்கும் என்ற நெருடல் உண்டாகும். அவ்வாறான நெருடல் அவர்களின் சிந்தனை ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

எனவே, REACT செயல்முறையின்வழி கதைகளைக் கற்பிக்கும் ஆற்றல் ஆசிரியருக்கு வளர வேண்டும். கதைகளின்வழி மாணவர்கள் அவர்கள் சார்ந்த சமுதாயம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துணரும் வாய்ப்பினைப் பெறுகின்றார்கள் (லாஸார்,1993). கதை கற்பித்தலின்வழி, மாணவர்கள் இலக்கியத்தைத் திறனாய்வு மேற்கொள்ளவும் அவற்றுள் விரவிக்கிடக்கும் கூறுகளை உய்த்துணரவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. கதைகளை வாசிப்பதன்வழி பல்வேறு எழுத்தாளர்களின் நடையியலையும் மாணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அதற்கு REACT செயல்முறை மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று நம்பலாம். கதைகள் மாணவர்களைக் கவரும். கதைப்பாடத்தின் வழியாக ஆசிரியர் ஒரு கருத்தினையோ அல்லது பொருளினையோ உணர்த்தினால் அவை எடுத்த முயற்சி எளிதாக முடியும். மாணவரின் மனமும் கற்பனையும் ஒன்றுபட்டு இருக்கும் வேளையில் பாடம் நடத்தினால் அது வெற்றிகரமான பாடமாக அமையும். சிறுகதை படிக்கும் மாணவனின் மனம், செவி, அறிவு ஆகியன திறந்து இருக்கும். சிறுகதையினில் இழையோடும் யதார்த்தங்கள் மாணவரின் மனத்தை வளர்ச்சி அடையச் செய்யும் வல்லமை கொண்டது. பள்ளியில் உள்ள நவீனமான கற்றல் கற்பித்தல் சாதனங்களையோ அல்லது மிகநேர்த்தியான பாடத் திட்டத்தினாலோ கற்றல் நிறைவேறுவதில்லை. மாறாக ஆசிரியரின் தனித்தன்மையே முதன்மைப் பங்கு ஆற்றுகின்றது. பல்வகையில் வியாபித்து இருக்கும் கற்பித்தல் துணைப்பொருட்களை ஆசிரியர்கள் அடையாளம் காண வேண்டும். சிறுகதை என்பது வாழ்வியல் பெட்டகம். வாழ்நாள் கல்விக்கு வித்திடும் கற்பித்தல் துணைப்பொருள். அதனை முறையாகத் தெரிவு செய்து பாங்குடன் கற்பித்தால் ஆசிரியரின் பாட நோக்கம் நிறைவடையும். நாடு விரும்பும் முழுமையான மனிதனை உருவாக்கும். தேசியக் கல்வித் தத்துவம் முழுமை அடையும்.

**மேற்கோள்கள்**


Ahmed, A. H. (2010). Students' problems with cohesion and coherence in EFL essay writing in Egypt: Different perspectives. *Literacy Information and Computer Education Journal (LICEJ)*, *1*(4), 211-221.

Gregg, N., Coleman, C., Davis, M., & Chalk, J. C. (2007). Timed essay writing: Implications for high-stakes tests. *Journal of Learning Disabilities*, *40*(4), 306-318.

Hounsell, D. (1997). Contrasting conceptions of essay-writing. *The experience of learning*, *2*, 106-125.

Lazar, Gilian. (1997). *Literature And Language Teaching*. Cambridge: CUP Sujiman, Panuti Hadimurti

Mohamad. (1998). *Memahami Cerita Rekaan*. Jakarta: Pustaka Jaya.

Norton, L. S. (1990). Essay-writing: what really counts?. *Higher Education*, *20*(4), 411-442.

Orwell, Charles Dickens Essay By George, et al. (1946). *Critial Essay*.

Prosser, M., & Webb, C. (1994). Relating the process of undergraduate essay writing to the finished product. *Studies in Higher Education*, *19*(2), 125-138.

Teeuw, Andries. (1991). *Membaca dan Menilai Sastera: Kumpulan Karangan*. Jakarta: Pustaka Utama

Thurstun, J., & Christopher, C. (1997). Exploring academic English: A workbook for student essay writing.